# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075880
C

1. District மாவட்டம் : Dharmapuri   PS: காவல்நிலையம் VAC   Year: ஆண்டு 2023   FIR No.: மு.த.அ. எண் 06/AC/2023   Date: நாள் 13.10.2023

2. (i) Act சட்டம்: The Prevention of   Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Corruption Act, 1988   Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: as amended in 2018   Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்   Date to : நாள் வரை 10.10.2023 at 08.30 hrs and
Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை 13.10.2023 at 08.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.10.2023   Time நேரம் 07.15 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் at the office of the B-Mallapuram Town Panchayat, Bommidi, Pappireddipatty Tk, Dharmapuri Dt. about 60 Kms. South-east.
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Elavarasan   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Kannan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20/2023   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation தொழில் Studying College   (g) Address : முகவரி Vijaya Nagar, Kattu Valavu, Near Veppadi River, B-Mallapuram, Pappireddipatti Tk, Dharmapuri Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Venkatachalam, Water Supply Staff, O/o the B.Mallapuram Town Panchayat, Bommidi, Pappireddipatty Tk, Dharmapuri Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................. Rank .................. to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 13/10/2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.10.2023 at 11.40 hrs

Name பெயர் G. PERUMAL,
Rank நிலை INSPECTOR OF POLICE, V&AC, DHARMAPURI.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2023, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி .

******

இன்று 13.10.2023 ஆம் தேதி காலை 07.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தாலுக்கா, பொ.மல்லாபுரம் அஞ்சல், விஜய நகர் காட்டுவளவை சேர்ந்த, கண்ணன் மகன் திரு.க.இளவரசன் என்பவர் அலுவலகம் வந்து எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பொ.மல்லாபுரம், விஜய நகர் காட்டுவளவில் குடியிருந்து வருகிறேன். நான் பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலைக்கலலூரியில் இளநிலை (தமிழ்) மூன்றாம் ஆண்டு படித்து வருகிறேன். எங்களது வீட்டிற்கு அருகில் எனது பாட்டி திருமதி.சரஸ்வதிக்கு சொந்தமான அவரது பெயரில் மல்லாபுரம் சர்வே எண்.110/1B–ல் உள்ள நிலத்தில் கடந்த ஜனவரி 2023–ல் மூன்று கடைகள் கட்ட ஆரம்பித்து நான்கு மாதத்திற்கு முன்பு கட்டிமுடிக்கப்பட்டது. கடைகள் கட்டிக்கொண்டிருக்கும்போது கடைக்கு மின்சார இணைப்பு கேட்டு பொம்மிடி டவுன் EB ஆபிசில் எனது பாட்டி திருமதி.சரஸ்வதி பெயரில் விண்ணப்பம் செய்திருந்தோம். கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு பொம்மிடி டவுன் EB ஆபிசிற்கு சென்று எங்களது மின் இணைப்பு குறித்து கேட்டபோது, அதற்கு அவர்கள், நீங்கள் டவுன் பஞ்சாயத்து ஆபிஸ் அனுமதியில்லாமல் கடை கட்டியுள்ளீர்கள் என்றும், ஆகவே டவுன் பஞ்சாயத்தில் NOC பெற்று வந்து தந்தால்தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்று கூறிவிட்டார்கள். பிறகு நானும், எனது பாட்டி சரஸ்வதியும் கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு பொ.மல்லாபுரம் டவுன் பஞ்சாயத்து ஆபிசிற்கு சென்று EO–வை பார்த்தபோது, அவர் ஆபிசில் இல்லை, அப்போது ஆபிசிலிருந்த வாட்டர் சப்ளை ஸ்டாப்பாக வேலை செய்யும் திரு.வெங்கடாஜலம் அவர்கள் எங்களை பார்த்து விவரம் கேட்டார். நாங்கள் கட்டியுள்ள கடைக்கு மின் இணைப்பு பெற NOC வாங்க வந்தோம் என்று சொன்னோம். அதற்கு அவர் கடை கட்டுவதற்கு டவுன் பஞ்சாயத்து ஆபிசில் அனுமதி வாங்கியுள்ளீர்களா என்று கேட்டார். நாங்கள் இல்லை என்று சொன்னோம்.

அதற்கு அவர் கட்டிடத்தின் ப்புளூ பிரிண்ட் வைத்துள்ளீர்களா என்று கேட்டார். நாங்கள் அப்போது கையில் வைத்திருந்த காடையாம்பட்டி திரு.மாதேஸ்வரன் இன்ஜினியரால் தயார் செய்யப்பட்டு கையொப்பம் செய்திருந்த எங்கள் கடையின் ப்புளூ பிரிண்ட்டையும், எஸ்டிமேசனையும் அவரிடம் கொடுத்தோம். அதற்கு அவர் இந்த ப்புளூ பிரிண்ட் செல்லாது, எங்கள் ஆபிஸ் இன்ஜினியர் கையொப்பம் செய்தால்தான் செல்லும் என்றும் சொல்லி அவற்றை எங்களிடம் திருப்பி கொடுத்துவிட்டு, புதியதாக ப்புளூ பிரிண்ட் தயார் செய்து, VAO சான்று, பத்திர நகல் மற்றும் 30 வருட EC ஆகியவற்றை வாங்கிகொண்டு அவரை வந்து டவுன் பஞ்சாயத்து ஆபிசில் பார்க்குமாறு சொன்னார். மேலும் அவரே NOC விரைவாக பெற்றுதருவதாக சொன்னார். பிறகு கடந்த 02.10.2023 தேதி காலை சுமார் 8.30 மணிக்கு நான் என்னுடைய 6380970988 செல் நெம்பரிலிருந்து திரு.வெங்கடாஜலம் அவர்களின் செல் நம்பரான 8098880029 என்ற எண்ணிற்கு போன் செய்து ப்புளூ பிரிண்ட் மற்றும் எஸ்டிமேசன் தயார் செய்துவிட்டேன். எப்போது கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் பொ.மல்லாபுரம் டவுன் பஞ்சாயத்து ஆபிசில் இருப்பதாக கூறி ஆவணங்களை எடுத்து வர சொன்னார். நானும், ப்புளூ பிரிண்ட் மற்றும் எஸ்டிமேசனையும் எடுத்துக்கொண்டு ஆபிஸிற்கு சென்று அன்று காலை சுமார் 9 மணிக்கு திரு.வெங்கடாஜலம் அவர்களை நேரில் சந்தித்து ஆவணங்களை கொடுத்தேன். அவற்றை வாங்கி பார்த்த அவர் ப்புளூ பிரிண்ட்டில் இன்ஜினியரிடம் கையொப்பம் பெற ரூ.2,000/- செலவு ஆகுமென்று சொல்லி என்னிடம் இருந்து ரூ.2,000/- கேட்டு பெற்றுக்கொண்டார். பின்னர், பத்திர நகல், 30 வருட EC மற்றும் VAO சான்று ஆகியவற்றை தயார் செய்து எடுத்து வந்து அடுத்த நாள் அவரை ஆபிசில் வந்து பார்க்குமாறு சொன்னார். மேலும் வேலை முடிக்க நிறைய செலவாகும் என்று சொல்லி, அடுத்த நாள் அவரை வந்து சந்திக்கும் படி கூறி என்னை அனுப்பி வைத்துவிட்டார். நான் அடுத்த நாள் 03.10.2023 அன்று காலேஜ் முடித்து மாலை சுமார் 5.30 மணிக்கு திரு.வெங்கடாஜலம் அவர்களை அவர் சொன்னவாறு டவுன் பஞ்சாயத்து ஆபிஸ் சென்று சந்தித்தேன். அப்போது அவர் இன்ஜினியர் இன்னும் ப்புளூ பிரிண்ட்டில் கையொப்பம் போடவில்லை என்றும், மற்ற ஆவணங்களை விரைவாக தயார் செய்யுமாறும், அடுத்த நாள் அவருக்கு போன் செய்யுமாறும் சொல்லி அனுப்பி வைத்துவிட்டார். பிறகு அடுத்த நாள் 04.10.2023 அன்று காலை சுமார் 7.30

மணிக்கு நான் என்னுடைய 6380970988 செல் நெம்பரிலிருந்து திரு.வெங்கடாஜலம் அவர்களின் செல் நம்பரான 8098880029 என்ற எண்ணிற்கு போன் செய்தபோது, அரை மணி நேரம் கழித்து போன் செய்யுமாறு சொல்லி கட் பண்ணிவிட்டார். பிறகு நான் மீண்டும் அவருக்கு சுமார் 7.50 மணிக்கு போன் செய்தபோது அவர் மீட்டிங் செல்வதாகவும், அதனால் அடுத்து நாள் ஆபிசில் வந்து ஆவணங்களுடன் சந்திக்குமாறும் சொன்னார். அடுத்த நாள் 05.10.2023 அன்று காலை காலேஜ் செல்லும்போது காலை சுமார் 7.55 மணிக்கு நான் பொ.மல்லாபுரம் டவுன் பஞ்சாயத்து ஆபிஸிற்கு சென்று பார்த்தபோது திரு.வெங்கடாஜலம் அவர்கள் ஆபிசில் இல்லை. அதனால் அவருக்கு போன் செய்து அவர் கேட்ட ஆவணங்கள் எடுத்து வந்துள்ளதாக சொன்னேன். அதற்கு அவர் சாயங்காலம் வந்து ஆபிசில் கொடுக்குமாறு சொன்னதால் நான் காலேஜிக்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு அன்று மதியம் 01.35 மணிக்கு திரு. வெங்கடாஜலம் அவர்களுக்கு போன் செய்து எப்போது வரவேண்டும் என்று கேட்டதற்கு சாயங்காலம் வா என்று சொன்னார். நானும் காலேஜ் முடித்து பொ.மல்லாபுரம் டவுன் பஞ்சாயத்து ஆபிஸ் சென்று திரு. வெங்கடாஜலம் அவர்களை பார்த்து பத்திர நகல், 30 வருட EC மற்றும் VAO சான்று ஆகியவற்றை அவரிடம் கொடுத்தேன். அவர் அவற்றை வாங்கிக்கொண்டு நிறைய செலவு ஆகுமென்று மட்டும் சொல்லி என்னை அனுப்பி வைத்துவிட்டார். பிறகு 10.10.2023 தேதி காலை 8.30 மணிக்கு நான் காலேஜ் போகும் போது பொம்மிடி ரயில்வே நிலையம் எதிரில் டுவீலரில் நின்றிருந்த திரு.வெங்கடாஜலம் அவர்களிடம் NOC குறித்து கேட்டேன். அதற்கு அவர் தயார் செய்துவிட்டு நானே கூப்பிடுறேன் என்றும், பணம் ரெடி செய்யுமாறும் சொன்னார். அதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்று கேட்டேன். அதற்கு அவர் வேலை முடிக்க தனக்கும், மேல் அதிகாரிகளுக்கும் பணம் ரூ.25,000/– கொடுக்க வேண்டியிருக்கும் என்றும், உன் பாட்டியிடம் சொல்லி தயார் செய்து வைக்கும்படியும் சொன்னார். அதன்பிறகு 12.10.2023 தேதி எனது பாட்டி திரு.வெங்கடாஜலம் அவர்களுக்கு போன் செய்து தருமாறு என்னிடம் கேட்டார். நான் என்னுடைய 6380970988 செல் நெம்பரிலிருந்து திரு.வெங்கடாஜலம் அவர்களின் செல் நம்பரான 8098880029 என்ற எண்ணிற்கு காலை சுமார் 8 மணிக்கு போன் செய்து எனது பாட்டியிடம் கொடுத்தேன். எனது பாட்டி, திரு.வெங்கடாஜலம் அவர்களிடம் NOC குறித்து கேட்டதாகவும், அதற்கு அவர் நான் பணம் தயார் செய்ய

சொல்லி உங்க போனிடம் சொல்லிருந்தேன். தயார் செய்து விட்டீர்களா என்று கேட்டதாகவும், அதற்கு எனது பாட்டி சரஸ்வதி எவ்வுளவு பணம் என்று கேட்டதாகவும், அதற்கு திரு.வெங்கடாஜலம், சட்டம் எல்லாம் மாறிபோச்சு, ஆன்லைன்ல எடுக்கனும், நிறைய சட்ட சிக்கல் இருக்கு, ரூல்ஸ் பிரகாரம் சான்று வாங்கனும்னா ரூ.50,000/– ரூ.60,000/– செலவாகும் என்றும். அதற்கு 6 மாதம் ஆகும் என்றும் சொன்னதாகவும், அதனால் உங்க போனிடம் நான் ஏற்கனவே சொன்னவாறு பணம் ரூ.25,000/–த்தை ரெடி பண்ணி கொடுத்தால் இரண்டு நாளில் NOC வாங்கி கொடுப்பதாகவும், அதிகாரிகளிடம் இது குறித்து பேசி வைத்துவிட்டதாகவும் சொன்னதாக எனது பாட்டி என்னிடம் தெரிவித்தார். எனக்கு வாட்டர் சப்ளை ஸ்டாப திரு.வெங்கடாஜலம் அவர்களுக்கும், அவரது மேல் அதிகாரிகளுக்கும் அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.25,000/–ம் கொடுத்து வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.25,000/–த்துடன் இன்று அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் பொ.மல்லாபுரம் டவுன் பஞ்சாயத்து ஆபிஸ் வாட்டர் சப்ளை ஸ்டாப் திரு.வெங்கடாஜலம் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் க.இளவரசன், 13.10.2023.

Sir, Received the written report on 13.10.2023 at 07.15 hrs and further, after making a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.06/AC/2023, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 13.10.2023 at 08.30 hrs against the accused. The original FIR and the complainant of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

13/10/2023

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.